**சுருக்கம்**

தொழில்துறை மானியக் கோரிக்கை எண்.27 – 2019–2020 – அறிவிப்புகள் – சென்னை டைடல் பார்க்கில் தொழில் முனைவோர் துவக்கி மையம் (TIDEL Start up Hub) ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் ஏற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில்(ஜிஐஎம்) துறை**

**அரசாணை (வாலாயம்) எண். 204** **நாள் 18.7.2019**

**விகாரி வருடம், ஆடி 2**

**திருவள்ளுவர் ஆண்டு 2050**

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.7.2019 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் சென்னை டைடல் பார்க்கில் தொழில் முனைவோர் துவக்கி மையம் (TIDEL Start up Hub) ஏற்படுத்துதல் குறித்து கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

> "வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த துவக்கத் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க டைடல் பார்க் தொழில் முனைவோர் துவக்கி மையம் ஒன்று டைடல் பார்க் தரமணி வளாகத்தில் முதற்கட்டமாக சுமார் 3000 சதுர அடியில் ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் அமைக்கப்படும்."

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்குமாறும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், டைடல் பார்க் லிமிடெட் சென்னை, அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. அருண் ராய்
அரசு சிறப்புச் செயலாளர்

பெறுநர்:
மேலாண்மை இயக்குநர்,
டைடல் பார்க் லிமிடெட்,
4, ராஜீவ் காந்தி சாலை, தரமணி,
சென்னை – 600 113.

சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை,
சென்னை – 600 009

நகல்:
தொழில் (வசெதி ) துறை, சென்னை – 600 009

தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009

உதிரி நகல்/இருப்பு கோப்புக்காக.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

18.7.2019
பிரிவு அலுவலர்

18/7/19